**ஆய்வுச்சுடர்**: **பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்** ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-2, இதழ்-1, சனவரி 2019


# பிரபஞ்சகானம்

**(எழுத்தாளர் பிரபஞ்சனின் படைப்புப் பணியைப் போற்றும் அஞ்சலிக் கட்டுரை)**

**இரா.நரேந்திரகுமார்**

**இராசபாளையம் தமிழ்ச்சங்கம், இராசபாளையம், தமிழ்நாடு, இந்தியா**

''தமிழ்ச் சிறுகதையின் திருமூலர்'' எனப் புதுமைப்பித்தன் விதந்தோதிய எழுத்தாளர் மௌனியின் இருபத்து நான்கு சிறுகதைகளில் எட்டாவது கதைக்குச் சூட்டப்பட்ட ''பிரபஞ்சகானம்'' என்னும் தலைப்பு இந்தக் கட்டுரைக்கான தலைப்பாக நன்றியுடன் எடுத்தாளப்படுகிறது. ''பிரபஞ்சகானம்'' என்பது மனித குலத்துக்குப் பிரபஞ்சத்துடனான ஒத்திசைவு, சமன்பாடு என்கிற தெளிவு ஏற்படுமாயின் இலக்கியப் படைப்பாளிகளின் தார்மிகமும் அதுவே ஆகிறது. பாதி மண்ணில் புதைந்தும், பாதி புழுதியும் ஆகி, துண்டாகி நின்றிருந்த முருங்கை மரத்திலிருந்து, ஒட்டவைக்கப்பட்ட பச்சைப்பயிறு போல, பச்சைப் புள்ளியாய் தோன்றிய தளிரைப் 'பிரும்மம்' என இதனாலேயே கொண்டாடப் பிரபஞ்சன் தலைப்படுகிறார்.



□□□□□□□□□ –

நவீன எழுத்தில் கதாபாத்திரம் எனவொன்று பெரும்பாலும் அவசியப்படுவதில்லை. மனதின் சஞ்சாரமும், நிகழ்வுகளின் பின்புலச் சாத்தியங்களுமே எழுத்தாகின்றன. பிரபஞ்சனின் படைப்பியக்கக் காலகட்டத்தில் தமிழ்க்கதை மரபின் இயங்குதளம் குடும்பமும் உறவுகளுமே. புனைவொன்றில் கதாபாத்திரங்கள் இயங்குகின்ற 'வெளி'யே பிரதானமாகப் பேசப்படுவன. அந்த 'வெளி'யை வாழ்வின் உரைகல்லாக வனைந்து காட்டியவர் பிரபஞ்சன். அவருடைய மரி என்கிற ஆட்டுக்குட்டி பல்லாயிரம் பேரால் பல நூறுமுறை வாசிக்கப்பட்ட சிறுகதை.

''இலக்கியத்தால் சமூகத்துக்கு என்ன லாபம்?'' என வினவியவர்களுக்கு 'வண்ணத்துப் பூச்சிகளாலும் சிட்டுக்குருவிகளாலும் என்ன லாபம்?' போன்ற எதிர்வினா வாயிலாக நிறைவான புரிதலை ஏற்படுத்தியவர் பிரபஞ்சன். பட்டுப்புழு ஏன் இழை பின்னுகிறது என மார்க்ஸ் கேட்டதையும், பூ ஏன் பூக்கிறது என ஜே.கிருஷ்ணமூர்த்தி உரையாடியதையும் நினைத்துப் பார்க்கலாம்.

வாசிப்பவர்கள் ஈட்டும் வாசிப்பனுபவத்தின் போதாமை குறித்த ஆதங்கம் பிரபஞ்சனை அலைக்கழித்திருக்கிறது. நீதிபோதனையின் சேர்மானத்தால் கதைகளை அவர் எழுதினார். சாகித்ய அகாதமி விருதைப் பெற்ற தன்முனைப்பை (Ego) உதறியவர் அவர். தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருந்தவர். தன்மையம் தவிர்த்து, தன்னைப் பின்னிறுத்தியவாறு, நேற்றுப் பிரசுரமான கதைகளையும் உள்வாங்கி, அவற்றை எழுதிய புதியவர்களை உற்சாகப்படுத்தத் தயங்காத தயாளகுணம் அவருக்குண்டு. தனக்கென வடிவமைக்கப்பட்ட நாற்காலியில் வேறெவரும் வந்து அமர்ந்துவிட முடியாது என்கிற புன்னகை பொலியும் முகமும் அவருக்கு உண்டு, சமகால எழுத்துலக சகாக்களையும் அன்பு ததும்ப நேசித்தார். உதாரணத்துக்கு ஒன்று. கவியாளுமை தமிழச்சி தங்கபாண்டியனினட சிறுகதைத் தொகுப்பு 'முட்டுவீடு' (உயிர்மை வெளியீடு, டிசம்பர் 2018) தொகுப்பில் இடம்பெற்ற 'களவாணி மழை' சிறுகதை குறித்து பிரபஞ்சன் எழுதுகிறார் –

''தேர்ந்தெடுக்கிற விஷயத்துக்கேற்ற அடர்த்தியும், இறுக்கமும், கதையை நெய்யத் தமிழச்சி பயன்படுத்தி இருக்கும் மொழியும், எல்லாவற்றுக்கும் மேலே அதன் கலை நேர்த்தியும் என அக்கதை தமிழில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது எனத் தோன்றியது. அண்மைக்கால மனிதர்கள், குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது எனத் தோன்றியது. அண்மைக்கால மனிதர்கள், குறிப்பாகப் பெண்ணைப் பெற்றவர்கள், ஒரு நாகரிகச் சமுதாயம் தலைகுனிகிற, அ – மனிதச் செயல்களில் ஈடுபடுகிற, பெற்ற மகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்துகிற அந்த அறிவிலிகள் பற்றிய கதையே இது. ஆனால் அந்தச் செயல் குறித்த ஒரு சொல்லையும் இக்கதையில் தமிழச்சி பெய்துவிடவில்லை. மாறாக, இதை வாசிக்கிற ஒவ்வொருவரையும் அவர் துடிக்கச் செய்கிறார். அந்த அநியாயக் கொலைகளை நினைவு கூரச் செய்கிறார். உங்கள் இருதயங்களின் ஈரம் கசிய விடுகிறார். இப்படியுமா மனிதவிகாரம் செயல்படும் என்று துடிக்கச் செய்கிறார். ஆம். அவைகளைப் பற்றியெல்லாம் ஒரு வார்த்தையும் ஓங்கிச் சொல்லாமல் – மற்றும் உரத்துச் சொல்லாமல். இது தமிழச்சியின், கலையின் வெற்றி''.

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

இவ்வரிகள் வெறுமனே விமர்சனம் மட்டுமல்ல. பிரபஞ்சனின் சமூகப் பரிதவிப்பும் கூட. நல்லவனாக இருப்பது என் சுபாவம். நல்லவனாக இருப்பது என் முயற்சியால் இல்லை. என் இயல்பால் நான் வேறுமாதிரியாக இருக்க முடியாது. மானுடம் புரளும் போது தர்மங்கள் தாமும் சேர்ந்து புரளும். தன்னறம் இழுக்கும் என்பவர் பிரபஞ்சன்.

பிரபஞ்சன் மறைந்த நாளன்று வெளியான 'எமதுள்ளம் சுடர்விடுக' உட்பட எட்டுக் கட்டுரை நூல்கள், மூன்று நாடகங்கள், ஒன்பது நாவல்கள், முன்னூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளின் வாசிப்பில் துலக்கமாகிறது அவருடைய சமூகப்பார்வை.

எள்ளலும் பாய்ச்சலும் கொண்ட புதுமைப்பித்தன், கலையின் தரிசனத்தை மனித உறவின் மகத்துவத்தில் கண்டுணர்ந்த தி.ஜானகிராமன், விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையை அவர்களின் மொழியிலேயே சித்தரித்த ஜெயகாந்தன் ஆகியோரின் படைப்பியக்கத்தைத் தன் எழுத்துக்களில் தோய்த்து, தலைமுறைகளின் கைகளில் பரிசுப் பொட்டலமாக வழங்கியவர் பிரபஞ்சன். அடிமனிதனின் ஆழங்களில் உறையும் ரகசிய தாபங்களை மயிலிறகால் வருடிப் பிரபஞ்சன் படைத்த கதை – ருசி. பச்சைமாமி மெஸ் எனச் சிலாகிக்கப்படும் இக்கதையாசிரியர் பிரபஞ்சன் என்பதை வெளிப்படுத்தாத நிலையில் இதை எழுதியவர் ஜானகிராமனே என்கிற முடிவுக்கு எவரும் வரக்கூடும். 'மோகமுள்'ளில் தங்கம்மாவுடனான கூடலை விவரிக்கும் ஜானகிராமன் ''உறை கழற்றிய வீணை மாதிரிக் கிடந்த அந்த உடல் அலை அலையாக எழுந்தது'' என்பார் 'ருசி' கதையை வாசிப்பவன் நினைவில் இவ்வரி புளகிக்கும்.

''வாழ்க்கை என்கிற அபத்தத்தின் சில அற்புதக் கணங்கள் தம் வாழ்க்கையை வாழ்ந்து தீரச் சொல்கின்றன அந்த அற்புதக் கணங்கள் சில கதைகளில் - சில கவிதை வரிகளில் - சில சினிமாக்களில் - சில நாடகங்களில் நமக்குத் தரிசனம் தருகின்றன. இன்னும் கொஞ்சம் வாழ ஆசை ஏற்படுகிறது என்கிறார் பிரபஞ்சன்.

திரவுபதி போன்ற புராணப் பாத்திரமானாலும், இராசராச சோழன் போன்ற வரலாற்று வகைமையானாலும், அவற்றை மீளாய்வு செய்வதை சமூகக் கடமையாகக் கருதியவர் பிரபஞ்சன். சாமானியர்களைப் பிரதானமாக்கி அவரெழுதிய ''மானுடம் வெல்லும்'' கற்பனைத் தூக்கலற்ற வரலாற்று ஆக்கம். மணிமேகலைக் காப்பியம் பிரதியை மறுவாசிப்பிற்கு உட்படுத்தி தமிழ் பவுத்தம் குறித்த உரையாடலை ஏற்படுத்திய ''துறவாடைக்குள் மறைந்த காதல் மனம்'' ஆர்வலர்களை அடுத்த நகர்வு ஆயத்தம் செய்வது

தமிழியம், பெரியாரியம், பெண்ணியம் என்கிற கருத்தியலை ஆழ்ந்த கரிசனத்துடன் பிரபஞ்சன் அளவுக்குப் பேசும் ஒரு படைப்பாளி கிடைப்பது அரிதினும் அரிது. தமிழையே கற்பேன்; தமிழ் வாழ்வையே வாழ்வேன் என்பது பிரபஞ்சனின் உறுதிப்பாடு. பீடாதிபதிகளின் அருளுரைகளைப் பின்னுக்குத் தள்ளி, பெரியாரின் கருத்தியலைத் தன் படைப்புகளில் எதார்த்தத்துடன் அடையாளப்படுத்தியவர் இவர். ஒன்றுடன் ஒன்று உறவாடும் பன்மைக் கலாச்சாரத்தைத் தான் பங்கேற்கும் கூட்டங்களில் வலியுறுத்திக்கொண்டே இருந்தவர். ''என் மொழி சார்ந்த கலாச்சாரத்தை மேலும் திட்ப நுட்பம் உடையதாக்கி, என் காலத்து அறிவை, ஞானத்தை, ஆத்மாவை அதற்கு நல்கி, பலம் சேர்த்து, என் அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துச் செல்வதே என் பணி என்று நான் நம்புகிறேன்'' என்று பிரகடனப்படுத்துகிறார்.

பிரபஞ்சன் மேலும் சொல்கிறார், ''நான் உங்கள் ஆசிரியன். ஏனெனில் உங்கள் நலத்தின் பொருட்டும் நான் சிந்திக்கிறேன். இந்தப் பொறுப்பை எனக்கு யாரும் கொடுக்கவில்லை. வள்ளுவரையும் கம்பனையும் பாரதியையும் யாரும் நியமிக்காதது போல என்னையும் யாரும் நியமிக்கவில்லை. என்னை இப்பணிக்கு நானே நியமித்துக்கொண்டேன். ''என்னை நன்றாய் இறைவன் செய்தது தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு'' என்று சொல்லிக் கொள்ளும் உரிமை பெற்ற புலவர் வழி வந்தவன் நான் என்கின்ற உரிமை இதற்குக் காரணம்...''

தானியச் செழிப்புக்கா ஆடிமாதம் கொண்டாடப்படுவது ஆஷாட நவராத்திரி. தாவரங்களின் அதிபதியான சாகம்பரி தேவி வணங்கப்படுகிறார். பசுமை கொழிக்கச் செய்யும் இந்த தேவதைக்குத் தமிழில் ''பச்சைவாழி'' என்றொரு அருமையான பெயர் உண்டு. முறையாக தமிழ்ப் படித்த பிரபஞ்சன் இந்த அழகிய சொல்லை தன் கதை ஒன்றில் பயன்பாட்டுக்கு உட்படுத்துகிறார். ''குமாரசாமியின் பகல் பொழுது'' குறுநாவலில் ஒரு வாக்கியம் வருகிறது – ''பச்சைவாழியம்மன் பஸ் நிறுத்தத்தில் செண்பகா இறங்கி நடந்து தன் அலுவலகம் செல்வாள்''.

''தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப் பால்'' என்கிறது வள்ளுவம். தன்னைத்தானே காதலிப்பதையே தன்னுடைய நிறைவான வாழ்வியலாகக்

கருதியவர் பிரபஞ்சன். அதன் சாரமே பிரபஞ்சனின் கலை - இலக்கிய வெளிப்பாடு. கவிஞர் மனுஷ்யபுத்திரன் சொல்வது போல தன்னுடைய பிம்பங்களைத் தானே தின்று வாழும் 'நார்சிஸ்ட்' எழுத்தாளரல்லர் அவர். நான் எழுதியதை வாசித்தாயா? எப்படி எழுதி இருக்கிறேன் பார்த்தாயா? என் உபதேசத்தை வாய்மூடிக் கேள் என்பதெல்லாம் வாசகன் மீது நிகழ்த்தப்படும் உச்சகட்ட வன்முறை என உணர்ந்தவர் பிரபஞ்சன்.

அவ்வப்போது பிரபஞ்சன் உதிர்க்கும் சிந்தனை நறுக்குகள் சுவையானவை. ஆண் செருப்புகள் செய்யும் தொழிலாளிகள் பெண் செருப்புகள் செய்யும்போது மட்டும் கலைஞர்கள் ஆகிவிடுகிறார்கள் என அவர் சொல்வது எளிதல்ல. தர்மங்களை கடைப்பிடிப்பவர்களுக்கு தர்ம சங்கடங்கள் வரும் என்பது அவரது அவதானிப்பு. மனிதர்கள் தாங்கள் எதை விரும்புகிறார்களோ அதையே தங்கள் வசையாக மாற்றுவார்கள் என்கிறார். நாம் வாழ்வதில்லை, பிழைக்கிறோம். பிழையான வாழ்க்கையே பிழைப்பு என்பது பிரபஞ்சனின் வாழ்வியல் சட்டகம். காலத்துக்கும் பல்லாயிரம் கைகள் இருந்தன. அது வீடுதோறும் சென்று ஆளாகியிருக்கும் பெண்களுக்கெல்லாம் அவசர வளர்ச்சியை அள்ளிக்கொடுத்துவிட்டுச் சென்று விடுகிறது என்கிறார் பிரபஞ்சன். வரையறுக்கப்பட்ட இயங்கு வெளியில் பிரபஞ்சனின் படைப்பியக்கம் சென்றதில்லை. அவருடைய தேர்வுகளும் நகர்வுகளும் யாரையும் எதையும் நகல் செய்தது அல்ல.

இலக்கியம் என்பது வீட்டில் இறகுகளை உதிர்த்து, அண்டரண்டப்பட்சியின் பெரும் சிறகுகள் கொண்டு கலையின் வானளாவ வேண்டும். உன்னதங்களை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்கிற தமிழின் பன்முக ஆளுமை வாசுகி 21.12.2018ல் இயற்கை எய்திய பிரபஞ்சனின் கடைசி எழுத்து 1.11.2018 ல் எழுதப்பட்டதாம்.

பறவைகளின் அரசன் அண்டபேரண்டன் தன் கூட்டை, மனைவி மக்களைக் காண்பதற்காக ஞாலமே நடுங்கும் சிறகசைப்புடன் நேரம் தவறாமல் வந்து சேர்ந்ததாகப் பிரபஞ்சன் கடைசி எழுத்து நீள்கிறது. தமிழ்மண்ணில் காலத்தே வந்து சேர்ந்த அண்டரண்டப்பட்சி பிரபஞ்சன்.

பிரபஞ்சத்தை நேசித்த பிரபஞ்சனின் இறுதி ஊர்வல நாளன்று எழுத்தாளர் ரமேஷ் பிரேதன் எழுதிய முகநூல் பதிவு இது. ''இன்று பிரபஞ்ச தகனம். ஓயாத தூறல். தட்டுத்தடுமாறியேனும் போக வேண்டும். வாழ்வின் இறுதி நெருப்பைத் தீண்டும். ஐம்பூதம் ஒரு புள்ளியில் குவியும். ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருங்கணத்தில் ஒடுங்க வேண்டும். நேரம் தான் மனிதனுக்கு உரியது. காலமோ கடவுளுக்கு உரியது என்கிற ஜெயகாந்தன் தமிழ்மொழியே தத்துவச்சாயல் கொண்டது. தோற்றம் - மறைவு என்பதற்கு இணையான இயல்பு கொண்ட சொற்கள் தமிழ் மொழி போல் பிறவற்றில் இல்லை என்பார். பிரபஞ்சன் என்கின்ற எழுத்தாளுமை காலமானார் (27.4.1945 – 21.12.2018)

''ஈரோடு - தமிழர் உயிரோடு'' என்பது பெரியார் பற்றி பிரபஞ்சன் எழுதிய நினைவிடங்கல். 24.12.1973 ல் மறைந்த பெரியார் தொடர்பான பிரபஞ்சனின் நாட்குறிப்பு இது. ''இன்று தமிழர் தந்தை இறந்த நாள். ஞானப்பறவை ஒன்று உடலை உதறிவிட்டு வெளியில் மவுனத்தை எழுதிய நாள். பகவானே வந்து படுத்துக்கிடந்தார் போல் தந்தை பெரியாரின் சடலம் கிடந்தது'' கிட்டத்தட்ட பிரபஞ்சனின் சடலமும் அப்படித்தான் கிடந்தது!